Drinking water well for Harijans

* 181. *Q.*—Thiru K. ARIVAZHAGAN (on behalf of Thiru S. S. THENNARASU): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that Caste Hindus obstruct the Harijans taking water from the well dug for Harijans in Vellur village, near Sivakasi, Ramanathapuram District; and

(*b*) if so, the action taken thereon?

அரிசனங்களுக்குக் குடிநீர் கிணறு.

திரு. க. அறிவழகன் (திரு. எஸ். எஸ். தென்னரசு சார்பில்): மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசிக்கு அருகில் உள்ள வெள்ளூர் கிராமத்தில் அரிசனங்களுக்காக வெட்டப்பட்ட கேணியில் அவர்களைத் தண்ணீர் எடுக்க விடாமல் ஜாதி இந்துக்கள் தடுத்துக்கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: (அ) & (இ) இராமநாதபுரம் மாவட்டம், வெள்ளூர் ஊராட்சி மன்றம் அரிசனங்களுக்கு வெள்ளூர் கிராம சர்வே எண் 272/8-ல் ஒரு குடிநீர் கிணறு தோண்டியுள்ளது. ஆனால் அது கிணறுக்குப் போகும் பாதை வசதி அளிக்கவில்லை. இது காறும் அரிசனங்கள் சர்வே எண் 272/6-ல் உள்ள ஒரு பட்டா நிலம் வழியாக கிணறுக்குச் செல்வதை வழக்கப்படுத்தி வந்தார்கள். இந்தப் பொதுக் குடிநீர்க் கிணறுக்கு அரிசனங்கள் செல்வதைத் தடுக்கும் முகமாக மேலே சொல்லப்பட்ட நிலத்தின் சொந்தக்காரர் பின்னர் ஒரு வேலி அமைத்துள்ளார். கிணறுக்குச் செல்லும் பாதைக்குத் தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்வதைத் தவிர வேறு வழியில்லையாதலால், மாவட்ட ஆட்சியர் இது சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறார். அரிசனங்கள் இப்போது பிற தனிப்பட்ட கிணறுகளிலிருந்து குடிநீர் எடுத்து வருகிறார்கள். அவர்கள் குடிநீர் பெறுவதற்கு எந்த விதத் துன்பத்திற்கும் உள்ளாகவில்லை.

Midday Meals Scheme in the schools run by the Harijan Welfare Department.

* 182. *Q.*—Thiru N. WILSON APPOLLOS (on behalf of Thiru L. BALARAMAN): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

1973 டிசம்பர் 3]

(*a*) whether the Government have proposed to increase the existing grant of 15 paise for the Midday Meals Scheme in the schools run by the Harijan Welfare Department; and

(*b*) if so, the date from which such increased grant will be given?

அரிசன நலத்துறை நடத்தும் பள்ளிகளில் வழங்கும் மதிய உணவுத் திட்டம்.

திரு. என். வில்சன் அப்பலோஸ் (திரு. எல். பலராமன் சார்பில்): மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரிசன நலத்துறை நடத்தும் பள்ளிகளில் வழங்கும் மத்திய உணவிற்குத் தற்போது 15 பைசா வீதம் வழங்கும் அரசு மானியத்தை உயர்த்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆமெனில், எப்போது முதல் வழங்க உத்தேசம்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Construction of a multi-storeyed building at the Government Estate, Madras.

* 183. *Q.*—Thiru V. ISVARMURTI (on behalf of Thiru S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to the answer given to Legislative Council Starred Question No. 60 on the Floor of the Council on 18th August 1972—

(*a*) whether the Government have arrived at any decision over the proposal of constructing a multi-storeyed building at the Government Estate, Mount Road, Madras; and

(*b*) if so, the details thereof?

சென்னை அரசாங்க மாளிகையில் பலமாடிக் கட்டிடம் கட்டுதல்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 18-8-1972-ல் சட்ட மன்ற மேலவை உடுக்குறியிட்ட வினா எண் 60-க்கு அளிக்கப்பட்ட விடையினை யொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை அண்ணாசாலை அரசாங்க மாளிகையில் பலமாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டும் செயற்குறிப்பு குறித்து அரசு முடிவு ஏதும் எடுத்துள்ளதா ?